# அலகுத்தேர்வு : இயல் - 4

நேரம் : 60 நிமிடம் | மதிப்பெண் : 25

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $3 \times 1 = 3$

1. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார் இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்
2. மாணவர் பிறர் _________ நடக்கக் கூடாது.
   அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி
3. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ___________
   அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை
   இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வசதியில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** $3 \times 1 = 3$

4. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க _____________ அறிமுகப்படுத்தினார்.
5. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
6. நாம் ________ சொல்படி நடக்க வேண்டும்.

**III. சொற்றொடரில் அமைத்து எழுதுக.** $2 \times 1/2 = 1$

7. ஏட்டுக் கல்வி _____________________
8. சோம்பல் __________________________.

**IV. சொற்றொடரில் அமைத்து எழுதுக.** $2 \times 1/2 = 1$

9. வகுப்பு
10. உயர்கல்வி

**V. பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.** $4 \times 1/2 = 2$

| பிழை | திருத்தம் |
|---|---|
| 11. தெண்றல் | ______________. |
| 12. கன்டம் | ______________. |
| 13. நன்ரி | ______________. |
| 14. மன்டபம் | ______________. |

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்** $3 \times 2 = 6$

15. எதை நம்பி வாழக் கூடாது?
16. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?
17. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?
18. இன எழுத்துகள் என்றால் என்ன?

**VII. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

19. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
20. 'நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?
21. 'ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி இல்லை' என்னும் தலைப்பில் பேசுக.

**VIII. அடிபிறழாமல் எழுதுக.** $4 \times 1 = 4$

22. 'சிறப்பு' எனத் முடியும் மூதுரை பாடலை எழுதுக.

*******